பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 03 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபருடன் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆலோசனை நடத்தினார்.

2. தமிழ்நாடு உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்காக, ஆயிரத்து 111 மத்திய பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

3. தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ள நிலையில் தமிழக அரசின் உத்தரவுகளுக்கு தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலைப் பெற தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

4. தமிழக கடலோர பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் இன்றும் நாளையும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Orleans Masters** பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Aakarshi Kashyap** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் திரு. **Sheikh Mohamed Bin Zayed Al Nahyan** உடன் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

மேற்காசியாவில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தமது கண்டனத்தை தெரிவித்ததாகவும், இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்ததுடன், அவர்களின் சொத்துகளும் சேதமடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை வழியாக சரக்கு கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

மேற்காசிய பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மையை விரைந்து கொண்டுவர ஐக்கிய அரபு எமிரேட்சுடன்

இணைந்து இந்தியா பணியாற்றும் என்றும் தாம் தெரிவித்ததாக அதில் பிரதமர் கூறியுள்ளார்.

மேலும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபருக்கு தமது ரம்ஸான் வாழ்த்துகளையும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட 4 மாநிலங்கள், புதுச்சேரி யூனியன்பிரதேசத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 6 மாநிலங்களில் நடைபெறும் இடைத்தேர்தலுக்கு ஆயிரத்து 111 மத்திய பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இவர்களில் 557 பேர் பொது பார்வையாளர்கள், 158 பேர் காவல்துறை பார்வையாளர்கள் மற்றும் 326 செலவினப் பார்வையாளர்கள் என்று தேர்தல் ஆணைய செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தேர்தலை நேர்மையாகவும், வன்முறை ஏதும் நிகழாமலும் தடுக்கும் வகையில் நடத்துவதற்கு ஏதுவாக இந்தப் பார்வையாளர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பார்வையாளர்கள் தங்களுக்கான தொகுதிகளில் இன்று முதல் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ள நிலையில் தமிழக அரசின் உத்தரவுகளுக்கு தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலைப் பெற தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர், அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டிய துறையின் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் வெளியிட்டுள்ள உத்தரவில் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு ஆய்வு செய்த பின்னரே தலைமைத் தேர்தல் அதிகாரி மூலம் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காக அரசாணைகள் அனுப்பப்பட வேண்டும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நேபாள பேருந்து விபத்தில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 7 பேரின் உடல்களை சென்னை மற்றும் கோவைக்கு கொண்டுவர வெளியுறவுத்துறை மூலம் நடவடிக்கை எடுத்திருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்திவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்க ஏதுவாக மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் பாதுகாப்புப் படையினர் அடையாள அணிவகுப்பை நடத்தி வருகிறார்கள்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் 100க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் அடையாள அணிவகுப்பில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Mohan — 37 Sec)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் வண்ணக் கோலமிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte — Sivakumar — 27 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கடலூரில் நேற்று தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லாத சூழல் நிலவுவதாக கூறினார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டத்தில் பனியன் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை நேற்று நிறைவடைந்தது.

தொழிற்சங்கங்களுக்கும், உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் இடையே 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம் தற்போது முடிவடைந்து, 33 சதவீத ஊதிய உயர்வு அளிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக திருப்பூர் ஏற்றுமதியாளர்களின் சங்கத் தலைவர் திரு. சுப்பிரமணியன் மற்றும் தொழிற்சங்க நிர்வாகி திரு. சேகர் ஆகியோர் தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழக கடலோர பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்றும் நாளையும் தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் 22ஆம் தேதி வரை மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக குறையக்கூடும் என்றும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளின் ஒருசில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், அதிகபட்ச வெப்பநிலை 32 முதல் 33 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24

முதல் 25 டிகிரி செல்சியசாகவும் இருக்கும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே திருப்பத்தூர் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

ஒருசில பகுதிகளில் ஆலங்கட்டி மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Anuradha — 33 Sec)**

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் இணைவதற்கு பெரும்பாலான நேட்டோ நாடுகள் மறுத்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

-----------

ஈரான் மீதான தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில், ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது நேற்று அடுத்தடுத்து ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

-----------

ஹோர்முஸ் நீரிணையை பாதுகாப்பதற்கு உதவ தயார் என்று ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

-----------

உத்திரமேரூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மின்னணு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையத்தை காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திருமதி சினேகா நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

-----------

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் வாக்காளர்கள் அச்சமின்றி, 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் துணை ராணுவப் படையினர் மற்றும் காவல்துறையினர் பங்கேற்ற அடையாள அணிவகுப்பு நேற்று நடைபெற்றது.

-----------

ராணிப்பேட்டையில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிப்பதற்காக செயல்பட்டு வரும் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறையை மாவட்ட ஆட்சியர் சந்திரகலா நேற்று ஆய்வு செய்தார்.

-----------

அலுமினிய பாத்திர தயாரிப்பில் கடைபிடிக்க வேண்டிய தரக் கட்டுப்பாடுகள் குறித்து, இந்திய தர நிர்ணய கோவை அலுவலகத்தின் சார்பில் **2** நாள் பயிற்சி நடைபெற்றது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

**Orleans Masters** பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Aakarshi Kashyap** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இவர் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டு தகுதிச் சுற்று ஆட்டங்களில் சக வீராங்கனை **Shriyanshi Valishetty**-ஐ **21-19, 17-21, 21-13** என்ற செட் கணக்கிலும், சீன தைபேயின் **Lee Yu Hsuan**-ஐ **21-17, 21-17, 21-19** என்ற புள்ளிக் கணக்கிலும் வென்றார்.

**<<<<The End>>>>**